**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**முன்னிலை : திரு.K.R.கண்ணன், பி.ஏ., பி.எல்.,**
**(J.O.CODE : TN01220),**
**கூடுதல் சார்பு நீதிபதி, திருப்பூர்.**

**2025-ம் ஆண்டு ஜுலை மாதம் 10 ஆம் நாள் வியாழக்கிழமை**
**(திருவள்ளுவராண்டு 2056, விசுவாவசு வருடம், ஆனித் திங்கள் 26 ம் நாள்)**

**இடைநிலை மனு எண். 3/2025**

**in**

**அசல் மனு எண். 198/2021**

T. ரத்தினாம்பாள் ...மனுதாரர்/வாதி

//எதிர்//

1. சரசம்மாள்
2. புஸ்பலட்சுமி
3. பேபி
4. ஏ.சாந்தாமணி
5. எம்.கந்தசாமி
6. வசந்தாமணி
7. பாலகிருஷ்ணன்
8. ஜெயபிரகாஷ்
9. பழனிச்சாமி .....எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது என் முன்பு கடந்த 01.07.2025 ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஆர்.ரகுபதி,பி.ஏ.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், 9 ம் எதிர்மனுதாரர்/9 ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.M.அருணாசலம்,பி.காம்.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், 4, 5 எதிர்மனுதாரர்கள் எதிர்உரை தாக்கல் செய்யவில்லை என்று மேற்குறிப்பு செய்துள்ளார்கள். 6 முதல் 8 எதிர்மனுதாரர்கள் எதிர்உரை தாக்கல்

செய்யவில்லை. மனு மற்றும் 9ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த எதிருரை, வழக்கு ஆவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்து, இந்நீதிமன்றம் வழங்கும்.

**//உத்தரவு//**

1. இந்த மனு மனுதாரர்/வாதியால் உரிமையியல் நடைமுறை சட்ட தொகுப்பு கட்டளை VI விதி 17-ன் கீழ் இம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அசல் வழக்குரையினை திருத்தம் செய்ய அனுமதி அளிக்குமாறு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் : -**

2.1) இம்மனுவின் மனுதாரர் தாவாவில் வாதி ஆவார். வாதி, பிரதிவாதிகளுக்கு எதிராக பாகப்பிரிவினை கோரி அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

2.2) மேற்படி அசல் வழக்கு விசாரணைக்கு வரும்போது தான் வழக்கு தாவா மற்றும் ஆவணங்களை பார்த்த போது 6, 7, 8-ம் பிரதிவாதிகள் குறித்த விபரங்களும், ரங்கசாமிகவுண்டரின் வாரிசுதாரர்கள் விபரம் மற்றும் அதை குறித்த வாரிசுகள் வழிமுறைப்படம் (Genealogical Tree) வரைபடமும் தவறாக தெரிவிக்கப்பட்டு தாக்கல் செய்துள்ள விபரத்தினை, மனுதார் தற்போது தான் அறிந்து கொண்டதாகவும், உண்மையில் தாவா சொத்துக்கள் ஆதியில் 17.04.1935ம் தேதிய பாகசாசனப்படி ரங்கசாமிகவுண்டருக்கு பிதுரார்ஜித வகையில் பாத்தியப்பட்டது. பிதுரார்ஜித வகையில் பாத்தியப்பட்ட தாவா சொத்தில் ரங்கசாமிகவுண்டருக்கு 1/2 பங்கும், அவரது மகனான சுப்பணகவுண்டருக்கு 1/2 பங்கும் பாத்தியப்பட்டு, கூட்டு சுவாதீனத்திலிருந்து ஆண்டனுபவித்து வந்துள்ளனர். ரங்கசாமிகவுண்டர் அவருக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தில் 1/2 பங்கினை பொறுத்து அவரது மகள்களான கருணையம்மாள், அருக்காத்தாள், சரசாத்தான் ஆகியோர்களுக்கு 30.11.1951 தேதியன்று உயில் சாசனம் எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளார். ரங்கசாமிகவுண்டர் 25.07.1953 தேதியன்று காலமான பின்னிட்டு மேற்படி உயில்சாசனம் நடைமுறைக்கு வந்து, அதன்படி தாவா சொத்தில் 1/2 பங்கினை கருணையம்மாள், அருக்காத்தாள், சரசாத்தான் ஆகிய மூவரும் அடைந்து அவரது சகோதரரான சுப்பணகவுண்டருடன் கூட்டு சுவாதீனத்திலிருந்து ஆண்டனுபவித்து வந்துள்ளனர். சுப்பணகவுண்டர் அவரது

ஒரே மகனான முருகசாமி அவர்களை வாரிசாக விட்டு காலமாகிவிட்டார் முருகசாமி தாவா சொத்தில் 1/2 பங்கினை அடைந்து கூட்டு சுவாதீனத்திலிருந்து ஆண்டனுபவித்து வந்துள்ளனர். மேற்படி முருகசாமி தாவா சொத்தில் பங்கினை சுப்பையகவுண்டர் மகன் வெங்கடாசலம் என்பவருக்கு 16.09.1986 தேதி கிரையம் அளித்துவிட்டார். 12.04.1972 ம் தேதிய கிரைய ஆவணத்தின்படி மேற்படி முருகசாமி மீதியுள்ள 1/4 பங்கினை 1–ம் பிரதிவாதியான சரசம்மாள் அவர்களுக்கு கிரையம் அளித்துவிட்டார். மேற்படி ஆவணங்களின்படி சுப்பணகவுண்டர் மகன் முருகசாமிக்கு தாவா சொத்தில் எந்தவிதமான பங்கு பாத்தியதையும் இல்லை என்பதால் முருகசாமி வழக்கில் தரப்பினராக சேர்க்கப்படவில்லை. மேற்படி வெங்கடாசலம் தாவா சொத்தில் அவருக்கு பாத்தியப்பட்ட 1/4 பங்கில் பாதியை அவரது சகோதரரும்–பிரதிவாதியுமான பழனிச்சாமிக்கு 2013–ம் ஆண்டு தானசெட்டில்மென்ட் ஆவண எண்.3503/2013–ன் படி தான செட்டில்மென்ட் செய்து கொடுத்துவிட்டார்.

2.3) மேற்படி வெங்கடாசலம் 6, 7, 8–ம் பிரதிவாதிகளை அவரது வாரிசுகளாக விட்டு காலமாகிவிட்டார், கருணையம்மாள், வாதியையும், 2, 3–ம் பிரதிவாதிகளையும் வாரிசுகளாக விட்டு காலமாகிவிட்டார். அருக்காத்தாள் அவரது மகள்களான 4–ம் பிரதிவாதி சாந்தாமணி மற்றும் லேட்.சரோஜினி ஆகிய இருவரையும் வாரிசுகளாக விட்டு காலமாகிவிட்டார். மேற்படி சரோஜினிக்கு அவரது மகனான 5–ம் பிரதிவாதி கந்தசாமி ஒரே மகன் ஆவார்.

2.4) மேற்படி உண்மை விபரங்களுக்கு பதிலாக மனுதாரரின் முன் வழக்கறிஞர் தவறுதலாக மேற்படி வெங்கடாசலம் மற்றும் பழனிச்சாமி ஆகிய இருவரும் முருகசாமியின் மக்கள் என்று தவறுதலாக குறிப்பிட்டுவிட்டார். சுப்பணகவுண்டரின் மகனான முருகசாமி அவர்களுக்கு தாவா சொத்தில் தற்போது பங்குரிமை இல்லாததால் தான் அவர் உயிரோடு இருந்தும் தரப்பினராக சேர்க்கவில்லை.

2.5) ஆகவே வழக்கின் பிராதின் 5–வது பத்தியில், 4–வது வரியில், ***"அவருக்கு முருகசாமி என்கிற ஆண் மகன் இருந்து அவரும் காலமாகிவிடவே அவருக்கு***

***வெங்கடாசலம் என்கிற ஒரு மகனும் பழனிச்சாமி என்கிற 9-ம் பிரதிவாதி மகனும் வாரிசாக மேற்படி முருகசாமியின் சொத்தை அடைந்து அனுபவித்து வருகிறார். அதேபோல மேற்படி வெங்கடாசலம் 6 முதல் 8-வரையுள்ள பிரதிவாதிகளான மேற்படி வெங்கடாசலத்தின் மக்களை வாரிசாக விட்டு காலமாகிவிட்டார். ஆக மேற்படி வெங்கடாசலம் காலமானதிலிருந்து அவரது வாரிசுகளான 6 முதல் 8 பிரதிவாதிகள் அவரது பாக சொத்தை அடைந்து அனுபவித்து வருகிறார்கள் "*** என்பதையும், அதே பத்தியில் உள்ள வாரிசு வழிமுறைப் படத்தினையும் நீக்கி மனுவில் கண்டுள்ள விபரங்களின்படி மேற்படி உண்மை விபரக்களையும், வாரிசு வழிமுறைப்படத்தையும் சேர்த்தும் திருத்தம் செய்ய வேண்டி மனு தாக்கல் செய்யப்பபட்டுள்ளது.

**3) 9ம் எதிர்மனுதாரர் / 9ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் :-**

3.1) மனுதாரர்/வாதி மனுவில் கண்டுள்ளது போல் வழக்குரையை திருத்தம் செய்யவேண்டும் என்று மனு தாக்கல் செய்துள்ளார்.

3.2) மனுதாரர் மனு பொய்யானது, சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கது அல்ல. இதில் வெளிப்படையாய் ஒப்புக்கொள்ளும் சங்கதிகள் தவிர மற்றவை யாவையும் மனுதாரர் நிரூபணம் செய்ய வேண்டும்.

3.3) இந்த எதிர்மனுதாரர் 20.12.2021-ல் தெளிவாக எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளார். ஏற்கனவே 4ம் பிரதிவாதி சமூகம் நீதிமன்றத்தில் பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்திருந்தார். அதிலும் இந்த பிரதிவாதி தெளிவாக எதிர்வாதம் தாக்கல் செய்திருந்தார். அந்த வழக்கு 23.10.2024-ல் DFD ஆகிவிட்டது. தற்போது வாதி மற்றும் இதர பிரதிவாதிகள் ஒன்று சேர்ந்து கொண்டு எதிர்மனுதாரருக்கு கிடைக்க வேண்டிய பாகத்தை கொடுக்காமல் ஏமாற்ற வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் மனுவை அனுமதித்தால் பெருத்த இழப்பு ஏற்பட்டுவிடும். மேலும் வழக்கின் தன்மையை மாற்றும் விதமாகவும் அமைந்துவிடும்.

3.4) எனவே, சமூகம் கோர்டார் அவர்கள் கிருபை செய்து மேற்படி மனுதாரர் மனுவில் உண்மைகள் இல்லை என்பதால் மேலே கண்ட காரணங்களின் அடிப்படையில் எந்த

ஒரு விசாரணையும் இன்றி தள்ளுபடி செய்திட உத்தரவு செய்ய வேண்டுமாய் எதிருரையில் வாதுரைக்கப்பட்டுள்ளது.

3) 2, 3 பிரதிவாதிகள்/எதிர்மனுதாரர்கள் அறிவிப்பு அனுப்பி பெற்றுக் கொண்ட பிறகு, நீதிமன்றத்தில் ஆஜராக தவறியுள்ளதால் தோன்றாதரப்பினராக்கப்பட்டுள்ளார்கள். 4, 5 எதிர்மனுதாரர்கள், எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்று மேற்குறிப்பு செய்துள்ளார்கள். 6 முதல் 8 எதிர்மனுதாரர்கள் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை. 9ம் எதிர்மனுதாரர் எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

4. மனுதாரர்/வாதி மற்றும் 9ம் எதிர்மனுதாரர் தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் முன்னிலைப்படுத்தவில்லை. ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யவில்லை.

**<u>5. தீர்வு :–</u>**

5.1) இந்த மனுவின் மனுதாரர் தாவாவில் வாதி. 1 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தாவாவில் 1 முதல் 9 பிரதிவாதிகள். இந்த உத்தரவில் தரப்பினர்கள் தாவாவில் வாதுரைத்துள்ளவாறு விவாதிக்கப்படுகிறார்கள்.

5.2) தாவா வாதி தாவாச் சொத்தில் அவருக்குரிய 1/18 பாகத்தை பிரித்து ஒதுக்கி தனி சுவாதீனம் கேட்டும், இதர பரிகாரங்கள் கேட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளார். தாவாவில் வழக்கெழு வினாக்கள் வனையப்பட்டு, தாவா விசாரணைக்காக நிலுவையில் உள்ள சூழ்நிலையில், வாதி தற்போது, இம்மனுவின் மூலம் தாவாச் சொத்துக்கள் ஆதியில் எவ்வாறு யாருக்கு பாத்தியப்பட்டது என்பதைப் பொறுத்தும், வாரிசு வழி முறை படம் ஏற்கனவே தவறாக கொடுக்கப்பட்டதை சரி செய்து சரியான விவரங்களை தாவா வழக்குரையில் தெரிவிக்கும்பொருட்டு திருத்தப்பாடுகள் மேற்கொள்ள அனுமதி கோரியுள்ளார்.

5.3) 9ம் பிரதிவாதி எதிர்வழக்குரையில் வாதிக்கு முன்பே விவரங்கள் தெரிய வந்த பிறகும், காலம் கடந்து இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகவும், இந்த வழக்குடன்

தொடர்புடைய அசல் வழக்கு எண். 486/2018 எதிர்வாதத்திலும் வம்சாவழி விவரங்கள் இந்த பிரதிவாதி தெரிவித்த பிறகு காலம் கடந்து இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகவும், தாவாவில் வாதிக்கு உண்மைகள் இல்லை என்பதால் தான் தாவா விசாரணையை காலம் தாழ்த்த வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், மனுவை தள்ளுபடி செய்யுமாறு ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது.

5.4) மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிரூபண வாக்குமூல சங்கதிகள் மற்றும் 9ம் பிரதிவாதி எதிர்வழக்குரையின் மூலம் ஏற்படுத்தியுள்ள ஆட்சேபணைகள், வழக்கு கோப்பு ஆவணங்கள் ஆகியவை பரிசீலனை செய்யப்பட்டது.

5.5) தாவாக் கோப்பை பரிசீலனை செய்த வகையில், திருத்தப்பாடு மனு தாவா விசாரணைக்கு முன்பு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், இந்த மனுவின் மூலம் கோரப்பட்டுள்ள திருத்தப்பாடுகள் (Pre Trial Amendments) ஆகும். தாவா வாதி இம்மனுவின் மூலம் விசாரணை தொடங்குவதற்கு முன்பே தாவாவில் திருத்தப்பாடுகள் மூலம் திருத்தம் செய்ய அனுமதி கோரப்பட்டுள்ளதால், நீதியின் நலன் கருதி தாவாவில் சரியான தீர்வு ஏற்பட வேண்டியும், வாதிக்கு தாவாவில் முறையான வாய்ப்பு வழங்க வேண்டும் என்று முடிவு செய்து, நீதியின் நலன் கருதி இம்மனுவை அனுமதிப்பதே சட்டத்தின்பால் சிறந்தது என்று நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

முடிவாக, இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. 9ம் எதிர்மனுதாரர் எதிர்வழக்குரையின் மூலம் ஏற்படுத்தியுள்ள ஆட்சேபணைகளை கூடுதல் எதிர்வழக்குரையாக தாக்கல் செய்து கொள்ள அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. சூழ்நிலை கருதி செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு **2025 ம் ஆண்டு ஜுலை மாதம் 10 ஆம் நாள்** அவையறிய பகரப்பட்டது.

K R KANNAN
Digitally signed by K R KANNAN
Date: 2025.07.10 17:57:39 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.

**<u>1. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிய சான்றாவணங்கள்</u> :–** இல்லை

K R KANNAN Digitally signed by K R KANNAN Date: 2025.07.10 17:57:25 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.